**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.202/2017** **Date :20/04/2023**

**PW 4(சண்முகம் த/பெ.ராசு ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

21.குற்ற பத்திரிக்கையில் கடன் எண்.139 இரசீது வழங்காமலும், ரொக்க புத்தகத்தில் வரவு வைக்காமலும், கடந் பேரேட்டில் மட்டும் வரவ வைத்ததாக கூறப்படும் தேதி 17/11/2000 என்றால் சரிதான். அந்த தேதியும் விசாரணை அலுவலருக்கு விசாரணைக்கு அப்பாற்பட்ட தேதி என்றால் சரியல்ல. பணம் கொடுத்தேன் என்பதற்கு இந்த சாட்சி அஞ்சலம் வாய்மொழியாக கூறும் சாட்சியத்தை தவிர வேறு எந்த ஆவண சாட்சியமும் இல்லை என்றால் சரிதான். அந்த 2000 ம் ஆண்டிற்கான கணக்கு பேரேடு எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் கைப்பற்றியுள்ளேன். டே புக், கேஷ் புக் மற்றும் கடன் பேரேடு ஆகியவற்றை தொடர்ச்சியாக பதிவுகள் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த மூன்றையும் கைப்பற்றி தாக்கல் செய்திருந்தால்தான் எதில் விடுப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. ஏனென்றால் ஏதாவது ஒரு ஆவணத்தில் இருந்தால் போதும். சாட்சி அஞ்சலத்தின் வரவு செலவு குறித்து விசாரணை அதிகாரி எங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை.

22. எதிரியிடம் இந்த அஞ்சலம் நேரடியாக பணத்தை கொடுத்ததாக எந்த வித குறிப்பும் அவரது வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரியல்ல. கடன் பெறுவதற்காக கொடுத்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த சாட்சி இந்த வங்கியில் முறையாக கடன் பெற்றுள்ளார் என்றாலும், அதை திரும்ப செலுத்தாமல் ஏமாற்ற வேண்டுமென்பதற்காக இவ்வாறு சாட்சியமளித்துள்ளால் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்தவித முகாந்திரமும் இல்லாமல் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பவந்தமும் இல்லை என்றாலும் விசாரணை அலுவலர் அவருக்கு வழங்கப்பட்ட கால வரம்பை மீறி ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரியின் மீது இந்த குற்றத்தை சுமத்தியுள்ளார் என்றால் சரியல்ல. விசாரணை அலுவலர் ராமலிங்கமும் அவரது வாக்குமூலத்தில் சாட்சிகள் அஞ்சலம் ஆகியோரை விசாரித்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.